# உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 102 ஆம் பிரிவின் கீழ் இலங்கையில் வதிவுள்ள ஆட்களைப் பதிவுசெய்தல்

2024, சனவரி 01 முதல் செயல்வலுப்பெறும் வகையில், 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது 2024, சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் 18 வயதினை எய்தும் எந்தவொரு நபரும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பதிவு செய்துகொண்டு, வ.அ.இ. – TIN (வரிசெலுத்துநர் அடையாள இலக்கம்) இனைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமானதாகும்.

மேலும், வரிமதிப்பீட்டாண்டொன்றில் (ஏப்பிரல் 01 முதல் மார்ச் 31 வரையில்) ரூபா 1,200,000/- இற்கு அதிகமான வருமானத்தைக் கொண்டுள்ள எவரேனும் ஆளொருவர், வருமான வரிக்கு பதிவுசெய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்டவாறு பதிவினைப்பெற்றுக்கொள்ளாத ஆளொருவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பதிவுசெய்யப்படுவார் என்பதுடன் அவர் ரூபா 50,000/- இற்கு விஞ்சாத தண்டத்திற்கு உள்ளாதல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட அறிவித்தலைக் கொண்டுள்ள அதிவிசேட வர்த்தமான அறிவித்தல், கீழ்வரும் இணைப்பினூடாக பதிவிறக்கம் செய்துகொள்ளப்படலாம்.
http://www.ird.gov.lk/en/publications/sitepages/gazette.aspx?menuid=1602

## பதிவிற்கு விண்ணப்பிக்கும் முறை

1. **இணையவழிப் பதிவு**

   www.ird.gov.lk என்ற உள்நாட்டு இறைவரித் திணைக்கள வலைதளத்திற்குச் சென்று கீழே தரப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றவும். வழிகாட்டல்களுக்கு கீழே தரப்பட்ட இணைப்பினை அழுத்தவும். http://www.ird.gov.lk/si/eServices/sitepages/Registration.aspx?menuid=180101

   - இ-சேவைகளுக்குச் சென்று, “இ-சேவைகளுக்கான அணுகுகை” இனை அழுத்தி, “வரிசெலுத்துநர் பதிவு” என்பதினை அழுத்தவும்.
   - ஏற்புடைய வகையினை தெரிவுசெய்து, தரப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூர்த்திசெய்து சமர்ப்பிக்கவும்.
   - உங்கள் விண்ணப்ப படிவம் கிடைக்கப்பெற்றதும் திணைக்களம் அதனை மீளாய்வு செய்யும்.
   - அதன் பின்னர், வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தினைக் (TIN) கொண்ட சான்றிதழ் மற்றும் ஒரு-முறையிலான PIN இலக்கம் என்பவை நீங்கள் வழங்கியுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும்.
   - மேற்கூறப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றி, இணையவழி வசதிகளுடனான உங்கள் வலைதள கணக்கினை உருவாக்கலாம்.

2. **தபால் மூலம் அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு விஜயம் செய்வதன் மூலம் பதிவினைக் கோருதல்:**

   - பதிவுக்கான விண்ணப்ப படிவத்தினை முறையாக பூரணப்படுத்துங்கள். அதனை உ.இ.தி. தலைமை காரியாலயத்தின் 2 ஆம் மாடியில் அமைந்துள்ள முதன்மை பதிவுப் பிரிவில் அல்லது பிராந்திய/நகர அலுவலகத்தில் கையளிக்கவும்.
   - கீழ்வரும் இணைப்பினூடாக பதிவிற்கான விண்ணப்ப படிவத்தை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
     http://www.ird.gov.lk/en/Downloads/TaxpayerRegistrationDocs/TPR_002_E-R2.0.pdf

### தேவைப்படும் ஆவணங்கள்

இ-சேவையினூடான பதிவிற்கு, தேசிய அடையாள அட்டையின் PDF (இரண்டு பக்கங்களதும் ஸ்கான் பிரதி) ஆனது பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும். தே.அ.அ இலுள்ள முகவரியில் மாற்றமிருப்பின், ஏற்புடைய ஆவணம் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**